**IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, ATTUR.**

**DEPOSITION OF WITNESS**

**Sessions Case No. 278/2018**

**Prosecution witness 11**

| | |
|---|---|
| **Name** | **: ராமசாமி** |
| **Father's Name** | **:** |
| **Village** | **:** |
| **Taluk** | **:** |
| **Caste** | **:** |
| **Calling** | **: காவல் சிறப்பு உதவி ஆய்வாளர்(ஓய்வு)** |
| **Religion** | **:** |
| **Age** | **:** |

**(Accused absent. For accused petition u/s 317 Cr.P.C is filed and allowed)**

**Solemnly affirmed in accordance with provisions Act of 1873 of the day of 23.03.2026.**

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை:-</u>

1) நான் தமிழ்நாடு காவல்துறையில் பணியாற்றி கடந்த 31.07.2025 ல் பணி ஓய்வு பெற்றுவிட்டேன். 20.12.2017ம் தேதி வீரகனூர் காவல் நிலையத்தில் பணியிலிருந்தபோது ஆத்தூர் அரசு மருத்துவமனையில் இருந்து வந்த தகவலின் பேரில் உத்தரவின் பேரில் ஆத்தூர் அரசு மருத்துவமனையில் சென்று அங்கு சிகிச்சையில் இருந்த வீரகனூர் 1-வது வார்டு சேர்ந்த வேலுசாமி மகன் அங்குசாமி என்பவரிடம் வாக்குமூலம் பதிவு செய்து அவரிடம் கைரேகை பெற்றேன். பின்னிட்டு நிலையம் வந்து வீரகனூர் காவல் நிலையம் கு.எண்.196/2017 சட்ட பிரிவு 294(பி), 323, 324, 355, மற்றும் 506(2) இதச படி வழக்கு பதிவு செய்து நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கையில் அசல் மற்றும் வாக்குமூலத்தையும் சம்மந்தப்பட்ட நீதித்துறை நடுவர் எண்.1 ஆத்தூரிற்கு அனுப்பிவைத்தேன். பின்னிட்டு மேல் விசாரணைக்காக வழக்கு கோப்பை ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) எனக்கு தகவல் கிடைக்கபட்ட நேரம் 20.12.2017 மதியம் 1 மணிக்கு கிடைத்தது என்றால் சரியல்ல காலை 10 மணி. வழக்கு பதிவு செய்ததது தான் மதியம் 1 மணி. ஆத்தூரில் இருந்து வீரகனூர் காவல் நிலையம் செல்வதற்கு 1 மணி நேரம் ஆகும் என்று சொன்னால் சரிதான். வாக்குமூலம் பதிவு செய்யப்பட்ட நேரம் காலை 10 மணி. புகார் பெற்ற நேரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சட்ட பிரிவு 294(பி) பதிவு செய்யப்பட்டுள்ளதில் புகார்தாரர் தன்னுடைய வாக்குமூலத்தில் திட்டயதால் தனக்கு அவமானம் நேரிட்டதாக சொல்லியுள்ளரா என்று சொன்னால் இல்லை. எதிரிகள் மிரட்டியதால் தனக்கு உயிர் பயம் ஏற்பட்டதாக புகாரில் குறிப்பிட்டு சொல்லிவில்லை என்று சொன்னால் சரிதான். செருப்பால் எந்த பக்க கண்ணத்தில் அடித்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் மருத்துவமனை சென்று புகார்தாரரிடம் வாக்குமூலம் பெறப்படவில்லை என்பதால் தான் அதில் புகார் வாக்குமூலம் பெற்ற நேரம் குறிபிடவில்லை என்றால் சரியல்ல. பின்னிட்டு புகாதாரரிடம் ஒரு பொய்யான புகாரை பெற்று சரியாக விசாரிக்காமல் வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2026.03.23 16:44:13 +0530

**Assistant Sessions Judge,**
**Attur.**